பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# முதுமொழிமாலை.

இஃது
திரிபுவனரட்சகரான ஹாத்திமுல்அன்பியா நபிமுகம்மது
றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் பேரில்
எட்டயபுரம் சமஸ்தான வித்வசிரோன்மணி
**கனம் உமறுப் புலவர் அவர்கள்**
பாடியது.

திருத்தமான நான்காம் பதிப்பு.

இத்துடன் பேட்டையைச் சேர்ந்த ரஹ்மான்பேட்டை
புலவர் ஆ. நா.
**காஜா முகியித்தீன் இராவுத்தர்**
அவர்கள் பாடிய
ஈமான்மாலையும், பஞ்சநிவிர்த்தி முனாஜாத்தும்
சேர்க்கப்பட்டிருக்கிறது.

இது
ஷை புலவர் ஆ. நா. காஜாமுகியித்தீன் இராவுத்தரவர்கள்
குமாரர்
காஜா நாகூர்மீரா முகியித்தீன் இராவுத்தரால்
திருநெல்வேலி
ஹிலால் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

[விலை அணா 6.

Q7:417
N35
85803

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# முதுமொழிமாலை.

இஃது

திரிபுவனரட்சகரான ஹாத்திமுல்அன்பியா நபிமுகம்மது

றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் பேரில்

எட்டயபுரம் சமஸ்தான வித்வசிரோன்மணி

**கனம் உமறுப் புலவர் அவர்கள்**

பாடியது.

திருத்தமான நான்காம் பதிப்பு.

இத்துடன் பேட்டையைச் சேர்ந்த ரஹ்மான்பேட்டை

புலவர் ஆ. நா.

**காஜா முகியித்தீன் இராவுத்தர்**

அவர்கள் பாடிய

ஈமான்மாலையும், பஞ்சநிவிர்த்தி முனாஜாத்தும்

சேர்க்கப்பட்டிருக்கிறது.

இது

ஷை புலவர் ஆ. நா. காஜாமுகியித்தீன் இராவுத்தரவர்கள்

குமாரர்

காஜா நாகூர்மீரா முகியித்தீன் இராவுத்தரால்

திருநெல்வேலி

ஹிலால் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

இதன்] [விலை அணா 6.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# முதுமொழிமாலை.

## எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

அறநெறி வழுவாத்தவத்துறை வேந்தை யருமறைப் பொருளி னுட் பொருளைத், தறைமதியிட்ட காமியமுதவு சற்குணக் கற்ப காடவியைக், குறைவிலானந்தத் துறையிடத்தமர்ந்த கொண் டலை லோகநாயகரை, மறைபுகழ்ந்தேத்தும் ஞானவாரிதியை முகம்மதை யென்று காண்குவனே. (1)

பண்டை நாடொடுத்த பழவினையுலைத்த பழம்பொருட் டோரானவரை, யண்டர் நாயகரை யெழுதுதற்கரிய வழகொளிர் வச்ரதேகரையார், தெண்டிரைத் தரையிற்றோன்றுபல் பொருளு முணர்ந்திடு ஞானதேசிகரை, யெண்டிசை முழுதும் போற்றிட வந்த முகம்மதை யென்று காண்குவனே. (2)

பரகதி யுணர்ந்தோர்க் கருடயாபரரைப் பழவினைத் தொட ரறுத்தவரை, யருமறை சான்றோர்க்கரிய சான்றவரை யாரணத் துறையரும்பொருளைக், கரையிலாத்தவத்தின்மீது நின்றோரைக் கதிதரும் வழித்துணை மருந்தை, வரமளவில்லாக்குரிசினந் நபியை முகம்மதை யென்று காண்குவனே. (3)

கதிதரு சரணம்புயக் கடவுளரைக் கருணையஞ்சரோச ரட் சகரைத், துதிசெயுமதுர நவரசக்கவி வல்லோர் புகழ்சுடர்மணிக் குன்றைச், சததளபதயுகளரைச் சற்பன்ன பாஷையுமறிந்த சற்குணரை, யதிவிதப் புதுமைதரு மிறசூலையகுமதை யென்று காண்குவனே. (4)

அண்டகோளகைக் கப்புறத்தெழு மண்டத்தற் புதத்திருந் தரசியற்றுங், கொண்டலைச்சிறந்த புவனரட்சகரைக் கோதிலாச் சிற் குணத்தோரை, தண்டலையுலகம் பல்லுயிரனைத்து முறைந் திடும் வச்ரதாபரரை, வண்டலம் பியதிண்டோளுடைக்குரிசின் முகம்மதை யென்று காண்குவனே. (5)

அலகிலாவண்டத் தெழுந்தபல்லுயிர்க்கு மருடருசலசலோச னரை, யுலகெலா மவியும் ஊழியினிறுதி யுறையுளை முதிர்தவத் தினரைக், கலைமறை பலவுமுணர்ந்த மெய்ஞ்ஞானக் கடவுளைக் கதிதரும் வேந்தை, யிலகுபல்லுயிர்க்கு முயிரென நின்ற முகம் மதை யென்று காண்குவனே. (6)

வேதமுஞானப் பாகையுமடங்கா விமலரைச்சுகா திதப் பொருளை, நாதரையனந்த தெரிசனத்தோரை நவிலருமாமறைக் கொழுந்தைப், பூதரம் பணியும் பதாம்புய வேந்தைப்பொருந்து முக்குணக்கடவுளரை, மாதவக்குரிசின் முகம்மது நபியை மகிழ் வுறவென்று காண்குவனே. (7)

கூற்றுடறுணுக்கும்படை செறிகரரைக்குவலயம் போற்றிய வேந்தைச், சாற்றரும்புருடமேருவைக்கதிக டருகழலுடைக் கடவுளரைத், தோற்றிய சகலலோகரட்சகரைத் தொன்மறை யுதவுபுங்கவரை, நாற்றிசை புகழுமுகம்மது நபியை நலனுற வென்று காண்குவனே. (8)

சகலசத்துருவிக்கின விஞசரை மாதவப்புராதனக் கடவுள ரைப், புகல்திரிகால கியானரைச் சருவபூஸ்திதியாம் பரவேந்தை, நகைதருபாவ விஞசரைச்சிறந்த நகாயுதம் பணிபதாம்புயரைத், தகுமறைக்குரிய முகம்மது நபியைத் தயவுறவென்று காண் குவனே. (9)

வினைசெயக்கியான விருடனை நீக்கும் வேந்தரைச் சுரர்புரத் திறையைத், தினகரனென்ன வருகுலோத்தமரைத் திவ்ய மிர்கமதபுயரை, வனைகழலமரர் தொழுபதாம்புயரை மாகதிகாட்டு மாதவரைக், கனைகுரல் பாஞ்சசன்னியதேக முகம்மதை யென்று காண்குவனே. (10)

வேதபூஷணரை யாதிபுங்கவரை வினைப்பவக் கடல்கடந் தோரைத், தீதுறுங்கொடிய பாவமோசனரைத் திரிமலத் தகன ரைச்சிறந்த, பூதரமனைய சர்ப்பதகனரைப் பூரணச்சந்த்ர வதன ரைச், சோதியாசனு வாகரைச்சுடரார் முகம்மதை யென்று காண்குவனே. (11)

புன்னுனிப்பனி யிஞக்கைகடோறும் பொருந்தியாங் குறைந்த மாதவரை, மன்னுயிரனைத்துந் தன்னுயிரென்ன மகிழுமற்புதக்கடவுளரைப், பன்னியஞானச் சுடரை மிருகாதிபணி குமேசயப்பதவேந்தை, மின்னெனத்திகழுமெழின் முகம்மதுவை வியப்புறவென்று காண்குவனே. (12)

தற்பணந்தெரிசித்தோர் தொழிலனைத்துங் காட்டிய பாவை போற்சகத்தி, னுற்பவித்திடும் பல்லுயிர் களுமியங்கவுறைந்திடும் புநிதமாதவரை, யற்புதசகல லோகமுமோர் மாத்திரையிற் பூவலம் வருமரசைக், கற்பகாலமுமோர் நொடிவரையாக்கு முகம்மதை யென்று காண்குவனே. (13)

நீதிநூன் மறையின் முறைவழி நடாத்து நிருமலப்புநிதரை யிலங்குஞ், சோதியை யனந்தஞானரைக் குன்றிற்றோன்றிய சுடரெனச் சிறந்த, மாதவக்குன்றை வேதநாயகரை மறைவளம் பழுத்தநாவேந்தை, யாதிநூன் முடிவினின்ற மெய்ப்பொருளை யகுமதை யென்று காண்குவனே. (14)

விடுசுடர்ச்சோதி மயமெனும் வெட்ட வெளியினிற்றோன்று மெய்ப்பொருளை, யடல்பெறச் சிறந்தவாயிர நாமத்தண்ணலையதி ஜயவேந்தைச், சுடர்மதி கோடியெனவொளிதிகழும் ரூபரைச் சுவர்னமேனியரைக், கடையுகமுடிவிலனைத்தையுங் காக்குமுகம்மதை யென்று காண்குவனே. (15)

படிபுகழ்ந்தேத்தும் ஞானலோசனரைப், பகாப்பிரணவமுமுதுணர்ந்த, வடிவுடை தருமக்கடவுளை நித்யவாகரைப் புவனநாயகரை, விடமுமிழ்பவனு சனரருச்சனை செய்விகசிதபாத பங்கயரைக், கடிகமழ்மிருகமதமகுமூதைக் கவினுறவென்று காண்குவனே. (16)

புலன்களைந்தவித்த புநிதரைக் கருணைமழைபொழி விழிக்கடவுளரைப், பலன்பெறுசத்ய விரதரைச் சிறந்த நிசாபதி பணிபதாம்புயரை, நலன்றிகழ்புருடோத்தமரைப் பூலோக நாதரை யேக நாயகரைத், தலம்புகழ்ந்தேத்துமறை முகம்மதுவைத் தயவுறவென்று காண்குவனே. (17)

பரவுமானந்தச் சமுகரையமரர் வழுத்தரும்பதாம்புய வேந்தை, விரிசுடர்ச் சசிவர்ணரை நரர்தமக்கு வேண்டிய பலன் றருமரசைச், சுரர்குலரட்சகரைத் திரிலோகந்தொழு மதிஜயத் தவத்தோரை, வரமுறுங் கருணாகரரை நந்நபியை முகம்மதை யென்று காண்குவனே. (18)

விரிவுறுஞ்சகல கலைக்கியானரை மித்திரபரிபாலன வேந் தைத், தருமமுமருளும் வேதமும் பணிசெய்தவங்கள் நோற்றி ருந்தசான்றோரைக், குரைகழலமரர் மணிமுடிகிழித்து வடுப்படும் பதகுசேசயரை, வரமருள் கிருபைக்கடலை நந்நபியை முகம்மதை யென்று காண்குவனே. (19)

தடமுடைக்கோடி சூரியப்பிரகாசரைத் திரிலோகரட்சகரை யடல்செறிவரத்திறிலாரை வாலறிவினமைந்திடு மாதவக்குன் றைக், கொடையருட் கடம்பூண்டாரணத் துறைந்த கொண்டலை ராஜபூஷணரை, மடமிலாமதுர சாரசவசன முகம்மதை யென்று காண்குவனே. (20)

பொருவருந் தவங்களாற்றிய ஞானோதயரைப் புத்தேளிர் நாடோறும், பரவியவனந்த நாமங்கள் செறிந்த பரஞ்சுடர்த் தூதரை யுலகிற், றிரிதருசருவ ஜீவநாயகரைத் திகழ்கிருபாகர வேந்தை, யருமறை வடித்து நாத்தழும்பேறுமகுமதை யென்று காண்குவனே. (21)

வினையறநோற்று நின்றமேலவரை விதிமறை தனக்குமெட் டாரைக், கனைகழலடியோடணி முடியெவருங்காணொணக் காரண வடிவை, நனைமலர் சுவனமவனி பாதாள நரர்சராசரமெலாம் பொதியுஞ், சினையென விருந்த நபிமுகம்மதுவைத் தெரிவுற வென்று காண்குவனே. (22)

பொன்னினற்பசிய கற்பகமலர்கள் பொழிதருபுயாசல வேந்தை, மன்னியவுலக முறைபிறழாமற் களைகணுமகிழ்ந்து காத்தோரைப், பன்னருங்கற்பத்தினு மழியாதபதி மதினாநகர்க் கரசைத், தன்னிகரில்லாக் குரிசினன் னபியைத் தயவுற வென்று காண்குவனே. (23)

எண்ணருந்தவங்களிழைத்த மாதவரை யியல்புறு ஞான போதகரை, பண்ணவாவையுணீக்கிய வேந்தைப் பலன்றருமருந் தவத்தோரை, அண்ணலைக் கல்லாவரிது புல்லறிவோர்க்கறிய வொண்ணுத காவலரைக், கண்ணியவரங்கடரு கழலோரை முகம்மதை யென்று காண்குவனே. (24)

அலகிலாத்தவங்களாற்று மாண்டகையை அதிசய வமலரைச்சிறந்த, பலகலையுணர்த்துங் கடவுளைக் கரும பவங்கடுய்த் திடுங்கழலோரை, யுலகினிற்றரும நூன்முறைவளர்த்த வொற்றை வெண்குடையுடையோரை, யிலைமலி வேற்கை முகம்மது நபியை யினிதுறவென்று காண்குவனே. (25)

போதிலாப்பதவம் பழுத்த போற்ருெல்லையுலகெலாம் பூத்து நின்ருேரை, மாதவமெய்மை நூற்றுறை படிந்து மாலுயர் பவக்கடறார்த்த, சோதியை வினைசெய்முக்குறும் பெறிந்த தோன்றலை யருளுருவெடுத்த, நாதரைச்சிறந்த நபிமுகம்மதுவை நலனுற வென்று காண்குவனே. (26)

புலன்வழிமனஞ்செல்லாத மாதவரைப் பூதரம் பணிபதாம் புயரை, வலஞ்சுழன்றெழுந்த செழுங்கதிர்ப் பரிதிமலர்ப்பதம் வருடக்கண்டுயின்ற, பொலன்கழல் வனைந்தராஜகேசரியைப் பொருந்துமானந்த மெஞ்ஞானக், கலையமுதொழுகு மதுரமென் றீஞ்சொன் முகம்மதை யென்று காண்குவனே. (27)

உவகையங் கடல்வாய் மடைதிறந் தென்னவுள மகிழ் நகைபுரிவேந்தைப், புவனமீரேழுமமைக்கு முன்வடிவம் பேருமில்லாப் புதியவன்றன், நபியை யைம்புலன் களடக்கு மாதவரை நவிலுஞானப்பழம் பொருளை, யௌவனவாலறிவின் முகம்மது நபியை யாதுடனென்று காண்குவனே. (28)

பாடகத் தொடர்ச்சி பழவினைச் சிமிழ்ப்புபற்றற வெறிந்த மாதவர்கள், தேடரும் பாதபங்கயத்தோரைத்திகழும் வேதாந்த வேதியரைப், பீடுறுமுயிர்க்குள் உயிருமா யவற்றிற் பற்றிலாப் பெரியவன்றூதை, யேடலம்பிய திண்டோண் முகம்மதுவை யினிதுற வென்று காண்குவனே. (29)

தொடர்ந்தவல்வினை வேரறுத்த மாதவரைத் தூய்மறை நூற் கடற்கரைகள், கடந்துமா காமக்குறும் பெறிந்தவரைக்கடையுக முடிவினிற் சிறந்த, படந்தரு கொடிக்குணின்றிடும் வேந்தைப் பயோததி யிடந்தொறு மகிழ்வாய், நடந்தபுங்கவரை நபிமுகம் மதுவை நலனுற வென்று காண்குவனே. (30)

முடிவிலா ஞானப் பெருங்கடல் படிந்துமூவுலகளிக்கும் மன்னவரை, விடுசுடர்பரப்பு ஞானமெய்ச்சுடர்சேர் வெறுவெளிப் பொருளுணர்ந்தோரைப், படிபுகழமரர்முடிமணிகிழித்துப் பழந்தழும் புறைபதாம்புயரை, அடல் செறிதிண்டோண் முகம்மது நபியை அன்புற வென்று காண்குவனே. (31)

இருவினை நீக்கிமும்மல மகற்றியிடும்பை செய்பொறி புலனீத்து, வருதவத்தோர்கட்கிரங்கி மெஞ்ஞானவழி முறை காட்டிய வேந்தைக், கரையிலானந்தக் கடலெழுஞானக் கனியினைத் தொல்லை நாயகரை, விரிபழமறைகளுணர் மகுமூதைவியப்புற வென்று காண்குவனே. (32)

சுடுகதிரொன்றுயிரங் கடந்தோறுந் தோன்றிய போற் சராசரங்கள், இடைதொறுந்தோன்று மாதவத்தோரை யிருவினை செயுமலக்களிற்றைப், படருமெஞ்ஞானக்கயிற்றினல் வீக்கி யகமெனும் பந்தியிற் பூட்டுந், திடமுடைசுத்தக் கியான நந்நபியைத் தெளிவுற வென்று காண்குவனே. (33)

தொலைவிலாக் கொடுந்தீவினைக் கடல்கடந்த தோன்றலை யமரரேத்தெடுப்பக், கலைமுழுதுணர்ந்து தவத்துறை போயகடவுளை யாவருமுத்தி, நிலைபெற மாந்தர்க்களித்த நிர்மலரை நிகழ்த்தரு ஞானபாகையரைச், சிலைதொழுதிறைஞ்சு நபி முகம்மதுவைத் தெளிவுற வென்று காண்குவனே. (34)

அறநெறிவழுவாதொழுகிய தவத்தோர்அனுதினம் வழுத்து நாயகரை, மறைமுதலளவிற் பலகலையுணர்ந்து மலக்குறும் பெறிந்தபுங்கவரை, நிறைதருமின்ப ஆனந்தக்கிழங்கின்முளைத் தெழுநேயரையமரர், முறை முறை யேத்தும் பாதபங்கயரை முகம்மதை யென்று காண்குவனே. (35)

தெரிவரிதான அந்தத்தின் முடிவின் முடிவினைத்தேர்ந்துரை வேந்தை, அரியபல்கோடி தவத்துமூலாமலறிவெனும் பேரறிவோர்ந்து, விரிதருமரிய பேரின்பக்கடற்குளுறைந்துமெஞ்ஞான வாலறிவா, னறைமுதனன்குந்துறந்த நன்னபியை முகம்மதை யென்று காண்குவனே. (36)

மும்மலக் குறும்பை வேரொடும்பிடுங்கி மூச்சவித்திதயநெக் குருகச், செம்மலர்விழிநீர்சொலிக்க மெஞ்ஞானஞ் செனிக்க மாதவத்துணின்றதிக, வெம்மையார்ஞானப்பாகை களுணர்ந்து விளங்குபேரின்பவீடதனி, லெம்மையும் போற்றவிருந்த நங் நபியை முகம்மதை யென்று காண்குவனே. (37)

வெறுவெளியாகிப் பேரொளியாகி விளங்குமோரருவுருவாகி, அறையும் பல்லுயிராய் முக்குணமாகி அலகிலாவுலகமைத் தளித்த, இறைபவன்றாதைத் தொலைவிலானந்தத்திருந்த நிர்ம லச்செழுங்கொழுந்தை, நறைகமழ்ந்தொளிரும்புயமுகம்மதுவை நலனுற வென்று காண்குவனே. (38)

மன்னுபேரொளிகட்குறையுளை சிறந்த மறைப்பொருள் வடித்த நாவலரைப், பன்னுதற்கரியவின்பவீடளிக்கும் பழம் பொருள் ஞான நூல்பலவுங், கன்னவிரூண்மாதவர்க்கினி தருளுங் கடவுளைக் காரணமலையை, முன்னையூழ்வினையின் பவக்கட றொலைத்தமுகம்மதை யென்று காண்குவனே. (39)

மலமொடுபுலனும் பொறிகளு மகற்றிவருமிடைபிங்கலை யியங்கா தலகிற்பல்காலஞ் சுடர்வழிவெளியார்ந்தானந்தஞான மாங்குதிப்ப, நிலைபெறுஞ்சுடரும் பளிதமும்போலநின்றரும் பொருடனைப்பற்றும், இலகியதவரூபரை மருமூதை யினிதுற வென்று காண்குவனே. (40)

சார்ந்தவர்பாவ வினைத்தொடரறுத்த தயாளரைக் குரூதித வேந்தை, யேந்திய அண்டச்சுவர்களுமுருவி யிலங்கிடுமிருசுடர்ப் பிழம்பைத், தேர்ந்துணரன்பரிதயங்கடோறும் இருந்த செம் மறைக்கிழவோரைக், காந்தியமோலிகவித்திடு மரசை முகம்மதை யென்று காண்குவனே. (41)

தொன்று தொட்டுவந்தழும்மல மூடத் தோன்றுமம் மறக் கிழங்கனைத்துங், கன்றிடவெறிந்த பாதபங்கயரைக் கருதரு மூலகங்களௌவையு, நின்று தன்னொளிவால் விளக்கிடும் வேந்தை நிறைமனவாக் கொடுகாய மென்றிது தனக்கெட்டாத முன் ேனாரை முகம்மதை யென்று காண்குவனே. (42)

பவவினை நீக்குந்துவாத சாட்சரரைப் பகர்சகத்திரப் பெய ரோரைப், புவன மீரேழுங்கரதலா மலகம்போற்றெரி ஞான லோசனரைத், தவமுறுஞ்சனரட் சாதரசரோச சரணரைத் தற்பர வேந்தை, நவமிகுமிருது வசனரை நபியை முகம்மதை யென்று காண்குவனே. (43)

தலைக்குறைகமலக் கிடமுங்கதிசேர் தருமமக்காபுரத்தரசைச், சொலற்கருந்துறக்க மீதுகற்பாந்த காலங்கடொறுமிருந்தோரைக், கொலைக்கொடும்பாவம் பழுத்தறவொழுகுங் கூர்விழிக் குபிர்க் குலாந்தகரைக், கலைக்கடலெழுந்த மதி முகம்மதுவைக்கவினுற வென்று காண்குவனே. (44)

சோதிசேர்பானுகோபரையிலங்கு சுகானந்தரூபரைச்சிறந்த, போதமெஞ்ஞானசாகரத் தெழுந்த புத்தமுதத்தைவாலறிவி, ேனாதரும் பொருளையகண்டித ரூபாதீதமாய் விளங்குமொண் சுடரை, மாதவர்போற்று முகம்மது நபியை மகிழ்வுறவென்று காண்குவனே. (45)

அலகிலாஞான மனத்தரைச் சிறந்த ஆரணக்கற்பித வேந்தை, சொலவருமன்பர்க்கிரங்கிரட்சிக்குந் தோன்றலைச்சிற் குணத் தோரைப், பலமகாலோகாதாரரைக் கொடியபழிபடு புலனெறிந் தோரை, யிலகிய விசால துறக்கவாசனரை முகம்மதை யென்று காண்குவனே. (46)

சருவஞானியை ஞானந்தரூபரைச்சற்குணம் பொதிதரும சஞ்சலரைக், கறைதருங்கொடிய தீவினைப்பிழம்பைக் கடிந்திட வருங்கலாநிதியை, நிறைதருஞானத்துறைதனை விளக்குநேய ரைப்பலன்றருமலையை, மறையுபநிடதம் விளக்கிய வேந்தை முகம்மதை யென்று காண்குவனே. (47)

விலைவரம்பறியா மணிமுடிகவித்த விறற்சிபுரீல் சிறையேகி, அலகிலாவண்டம் பற்பலகடந்த அண்ணலை யறநெறித்துறையின், நிலைபெற நின்றமாதவர் துதிக்கு நேயரை ஞானநாவாயால், நவி வுறுங்கொடிய பவக்கடல் கடந்த நபியினை யென்று காண்கு வனே. (48)

அரியமாமாய வினைதங்களெல்லாம் அறிந்துணர்ந்திடுமட மரசைத், தெரிமறைச்சதுர்வேதாந்த வேதியரைத் தீக்கொடும் பாவமாரணரை, யிருவினைமாண்ட மாண்டநற்றவங்களியற்றரு லறைக்கிழவோரை, வருவிதிதனக்கோர் விதியதாய்நின்ற முகம் மதை யென்று காண்குவனே. (49)

சொலவருமொழியோடகத்தினுக்கெட்டாத்தூயரை முழுப் பழம்பொருளைப், பலகலையுணர்ந்த மாதவரகத்துட் படும்வெளி யதனிடைத் தோன்றும், கலைவலாளரை மெஞ்ஞான வீடுணர்ந்த காரணக்குரிசிலைச்சிறந்த, தலைநிலம்புரந்த மறைமுகம்மதுவைத் தயவுற வென்று காண்குவனே. (50)

ஒருவரும் பெறுதற்கரிய பேரின்பவானந்தக் கதியிடத் துறைந்த, நிருமல வேந்தை மலச்சுறவுகழ்ந்து நீங்கரும் பொறிக் கலமுலவு, மிருவினைத்திரை சேர் பிரபஞ்சக்கடற்கு ளெய்திய மாந்தருக் கெல்லாம், அருள் கொடுத்தளிக்கு முகம்மது நபியை அன்புற வென்று காண்குவனே. (51)

சொன்னநால்வகை மாமறை தொறுமிருந்த தோன்றலைத் தவத்துறைபோய, பன்னருஞ்சான் றோரிதயம்விட்டகலாப் பாத பங்கயக் கடவுளரை, மன்னிய சொற்க வரதவர் வல்லவரைத் திரி புவனங்காத்தோரைக், கன்ன விறிரடோண் முகம்மது நபியைக் கவினுற வென்று காண்குவனே. (52)

தீபமுஞ் சசியும் பொருந்துதல் போல தெரிவரும் பொருடனைப்பற்றி, மாபவத் தொலைத்து ஞானவாரிதியின் மாதவ நாடொறு நோற்ற, தாபதர் மனத்துட் டோன்றிய வேந்தைச் சகலமோட்ச காருண்யரை நற், சேவை செய்தமரர் போற்றிய நபியைத் தெளிவுற என்று காண்குவனே. (53)

அளவிலாஞான வானந்த வடிவா யமர்ந்து மன்பதை தமக்கிரங்கி, யுளமகிழ்ந் தழியாவரங் கடந் தருளு மோங்கலைச் சுரர் கணுயகரைக், கலைகணு நுண் ணூற்பொதியி லூதைய தாய்க் காசினி தனி லமர்ந்தோரை, வளமுறுமதுவின் கனியெனவிருந்த முகம்மதை யென்று காண்குவனே. (54)

அரியமாஞால வுவகையஞ்சுரும்பு தொடவ லரிதயமாதவத்தோர், பரவிய வேந்தை முடிவிலாதெங்குந் தானென வொளிர்பரஞ்சுடரைத், தெரிவுறு ஞான செல்வப்பிர தாபஞ் செழித்தருள் சுரந்த மெய்ப்பொருளை, யெரிகதி ரிரவி பணிபதாம் புயரை முகம்மதை யென்று காண்குவனே. (55)

தீதுபூத் தருளோ குவிந்திடுமாந்தர் சிந்தையிற் றோன்றிடாப் பொருளை, ஆதியிற் றோன்று மாதிநூல் பலவு முணர்ந்திடு மதீத தற்பரரை, ஏதமில் ஞான திவ்வியப் பிரகாசரை யிருவினை யெறிந்தோரை, நாதரை நபிகள் புகழ் மகுமூதை நலனுற வென்று காண்குவனே. (56)

மறையுப நிடதம் ஊற்றெடுத் தொழுகி வனப்புறுங் கிளவியான்றவரை, நறைகமழ்ந்தொளிரு முலம் பொருதிண்டோணபி கணுயகரை மாதருமத், துறைமறை வழாத தூயவர் மனத்துட்டோன்று மற்புதநவமணியை, யிறையருள்பழுத்த கனி முகம்மதுவை யினிதுற வென்று காண்குவனே. (57)

தவத்துறை திறம்பாக் கடவுளரிறைஞ்சுசரணரைச் சிறந்த வாலறிவின், அவத்தை யிந்திய மும்மலவிடயங்க ளவித்துற யோகமதுணர்ந்து, பவத்துறை யுழலா திருவினை யொருவிபரம் பொருடனைத் தெரிசித்த, நவத்துறை நபிகள் புகழ் மகுமூதை நலனுற வென்று காண்குவனே. (58)

அலகிலற்புதங்கடரு புராதனரை யணிநிலக்குப்பொறை யென்னுங், கலர் மனத்துறையாக் காரண வேந்தைக் கருதருந் திவ்யதாபரரை, மலவிருள் ஒருவி புலன்வழிதோயா மனத்தவர் பரவு மாதவரைக், கலையுமிணிலவு பகவருள் பணித்த முகம்மதை யென்று காண்குவனே. (59)

தவமுறுந் தருமவழி முறையன்புதவாது வப்புற்றமாதவரை, நவசத கோடி காரணந் தலையாநின்று நாமறை திறம்பாமற், புவிக ளோரேழும் பொதுவறப் புரந்த புனிதஞானந்தரை மதுரக், கவியுடைசான் றோர்க்கருள் கொடுத்தளிக்கு முகம்மதை யென்று காண்குவனே. (60)

அற்புத ரறியு மற்புதவேந்தை யமயங்களுனித்தெளி வோரை, விற்பகா வுடலின் மறுவியே கமழ்ந்த வேந்தலைமேதகு மணியைத், துற்பகாக் குபிரினிருளறுத் தொதுக்குந் துங்க வேன்மறுக்கரத்தோரைக், கற்பகாடவியை முகம்மது நபியைக் கவினுற வென்று காண்குவனே. (61)

மெய்த்தவ மறைக ளேத்துந்தூயவரை விரிந்த தீவினை பெயர்த்தோரைக், கைத்தொளி வீசுங்கழல் புகுந்தவரைக் காத் திடு மறத்திறத் தரசைப், பொய்த்தமோடாதி மோடர்கண் மனத்துட்புகாமறைக் கிழவரைக் கவைநாப், பைத்தலை நாகம் பகவருள்பணித்த முகம்மதை யென்று காண்குவனே. (62)

உப்பகலிடத்திலிருட்பவ நீக்கியுறுதியினிழல்கொள் காலி னரைத், தப்பின் மாமணியின் மூர்த்தியை வினையிற் சடச்சட நாறிய மூடர், வெப்புறுமுளத்திற் றங்கிலாவேந்தை வியப்புறு மதீதகாரணரை, ஒப்புதற்கரியவெழின் முகம்மதுவை யுவப்புற வென்று காண்குவனே. (63)

சான்றுபநிடதம் பயிற்றியசான்றோர் பழிச்சியகொழுநரைத் தவத்தி, னேன்றவர்க்கரசை வேதவாணிகரை யிருட்கலிபுறந்து ரத்தியகோ, றேன்றலைக்கவிகைச் சோலையினிழற்கீழ்த் துஞ்சிய மன்னர் மன்னவரைக், கான்றசெஞ்சுடரின்றாளென வொளிரு முகம்மதை யென்று காண்குவனே. (64)

வேதசிற்பரரை வியனுலகேத்தி வியப்புறும் பாதபங்க யரை, மாதவ வமுதாசனற்கினல்புரியவரும் பவத்துரித மாவினை யைக், காதியதூயதவத்தரைக் கருதினோர்கள் கண்கவர்வனப் பினரை, மூதிருட்படலஞ்சித்தெறிசோதி முகம்மதை யென்று காண்குவனே. (65)

புரைதரச்சிறந்த வாம்பலின் மூளரிபூத்ததை மாவதைத் ததுபோ, விருவினைவாயுநாடிதோத்ராதியிராகம் வாக்காதி சத் தாதி, விரிதருமவத்தைக்கரணமைங் கொசமெய்ஞானவாலறி வினுற்சுட்டுக், கரையிலானந்தக் கதியிடத்தமர்ந்த முகம்மதை யென்று காண்குவனே. (66)

மருளொளியுணர்வார்வரததூயவரை மாதவம்போன்றொளிர் புனித, நிருமலவேந்தை யறந்திகழ்தவத்தினின்ற மூதறிவரை மூவாக், குரிசிலைச் செழுந்தண்கவிகையின்முகிலாற் குவலயமுழு துங் காத்தோரை, அருளினிலுதித்த நபிகளுக்கரசை அகுமதை யென்று காண்குவனே. (67)

ஆயிரஞ் செங்காற் சுரிமுகவட்டையழல் விழிகூர்நுனைபுண் ணுக், காயெரிமணியின் கட்செவிபோலுங் கடுநடைபெயர்கிலா திருந்தங், கேயபன்னூல்களுணர்கினு நுந்தமருள்பெறுரிருங்கதி யெய்தார், காயவின்சோதி முகம்மதேநின்றுள் கனவினிலென்று காண்குவனே. (68)

மும்மலக்களிம்புநாறு மூர்த்திகள் புன்மனத்தினிற் றேன்றி டாப்பொருளைச், செம்மலையறங்கணுமொடாறுங் துஞ்சித்திகழுஞ் செங்கோற்கடவுளரை, வெம்மையாரமரர்தேய மண்ணுண்ணவந் தருள் வேந்தருக்கரசை, அம்மயிலுருவமாக நின்றோரை அகுமதை யென்று காண்குவனே. (69)

கருவுறுதுன்பங்கவிவளைப் புவனின்கண்ணுறு நோயினு விடைந்து, வருதுயர்த்துன்பநரை திரைமூப்பால் வருந்தியதுன் பம் வெங்கூற்று, லுருவினையொருவுதுன்பம் வெந்நரகிலுறு துயர்த்துன்பமொன்றின்றி,யிரு வினைநீத்த மாதவர் போற்று முகம்மதுவை யென்று காண்குவனே. (70)

பொழுதளந்தறி புள்ளொலித்திடக்கறங்கும் வடிமணிபுனை கடுவேகத், தெழும் பசும்புரவிவலஞ்சுழன்றெழுமென்றாள் விசும்புறவனைந்தேகா, நிழலிருளடையப்பணித்தமாவரதர் நேரிழைதமை மணந்துவந்த, செழுமுகிற் கவிகைமுகம்மது நபியைத் தெளிவுற வென்று காண்குவனே. (71)

அல்லல்செய் பின்னுச்சிமிழ்ப்பெனும் வேட்கையாப்பினி லமர்ந்து நல்லறத்தைக், கல்வியவொன்னார்வினையுமுலாமற் கருதருமுபநிடதத்தின், நல்லியற்சொன்னவேற்றிமெஞ்ஞானமுணர்ந்து மன்னுவுலகத்திற், செல்லுநன்னபிகள் புகழ் மகுமூதைத் தெரிவுற வென்று காண்குவனே. (72)

பன்னுமானந்த நறைமலரதீதபரரைக் கற்பீந்தரை மரண, மன்னியசனனவினைகளை நீக்கும் வரதரை சகலசூரியசம், பன்னரைத் துரிதபாவசேதனரைப் பகருநித்யானந்தரூப, நன்னபிமார்கள் வழுத்து நந்நபியை முகம்மதை யென்று காண்குவனே. (73)

சுத்தமெஞ்ஞானக்குமரியைத் தோய்ந்ததோன்றலைப் பகாவின்பத்திருந்த, நித்தரை நறுநெய்க்கடவிடுஞ்சுடரை நேயரை வியன்மனத்தவரை, பத்தருக்கதிகவே மஞ்சாலின்பப்பதி கொடுத்தருளிய வேந்தை, முத்தியை விளைக்கும் பதவிறசூலை முகம்மதை யென்று காண்குவனே. (74)

நான்மறைக்கெட்டாப்பேரின்பவாழ்வை நவிலுமாவிக்குறுந் துணையை, தீன்வழி நடத்தி யானந்தக்காக்ஷிசேர்க்கு மெஞ்ஞான தேசிகரைப், பான்மறை ஞானப்பாகைகளுணர்ந்த பத்தர்களெடுத்த சற்குருவை, தானமாரமுதத்திரு முகம்மதுவைத் தயவுற வென்று காண்குவனே. (75)

சணமிலவங்காடட நிமிடங்களஞ்சதுர்ப்பாகமீவிரட்டிக், குணமுறுந்துரித மனுத்துரிதாமாத் திரைகொளுங் காலங்களெனினுங், துணையடியேத்தப் பரகதியருளுந்தூயரை விழிக்கடங்காத, மணமெழுந் திவ்யரூபலாவண்யமுகம்மதையென்று காண்குவனே. (76)

## வேறு.

தொண்டர்க்கெளிதாய்த் தோன்று சுடர்க் கொழுந்தை ஞானவரோதயரைப், பண்டை மறைநூன் முடிவினின்ற பரத்தின் றாதை வினைத்தொடர்கள், மண்டும் பாழ்வாழ் வெனும் மாயை தன்னிலலைந்து மயங்காம, லண்டர் பதியை யளிக்கு மகுமூதை யென்று காண்குவனே. (77)

பஞ்ச விடயமறுத்தெறிந்த படிவரெஞ் ஞான்றினுமுவந்தே, துஞ்சுமக்க மீதுதித்தேதுறக்கநகர்க் கோரேணியெனச், செஞ்சொன்மதினத்திருந்தரசு செலுத்துங் கோவை யடியவருக், கஞ்சலென வந்தருள் கொடுக்கு நபியை யென்று காண்குவனே. (78)

அரியவிதுவென்றிது வென்றே அறைவதல்லா லாரணமுந் தெரிதற் கரிதாய் புவிவெளி நீர் செறியுங் கனல்மா ருதமாகி, விரியுமண்டம் பலவாகி யதனுட்டோயாப் பரவெளியி, லுரவு மிறசூல் முகம்மதை யென்னுளத்தி லென்று காண்குவனே. (79)

பரவியிறைஞ்சு மன்பரின் கண் பழுத்த கருணகர வேந்தை யிருடீங் குளத்துப் புல்லறிவோர்க் கெட்டாதிருந்த மறைப்பொருளை, அரியபல் லாயிரங்கோடி யண்டங்துகள் போற்பற்றிரு, சரணமுடைய மகுமூதைத் தயவோடென்று காண்குவனே. (80)

## வேறு.

விண்மதி பகுந்த மேதகு வேந்தை விகசித பாத பங்கயரைக், கண்மதியறியாத்தசையினைப் பருவக் கன்னிகையாக்கிய கருவை, யெண்மதி யுலகமடங்கலுந் துதிசெய் தேற்றிய காரணக்குருவைத், தண்மதிவதன முகம்மது நபியைத் தயவுற வென்று காண்குவனே. (81)

உண்மையர்க் குண்மை யுதவிய தருவை யுண்டிலைப் பிரிக்கு மாண்டகைக்கு, வண்மையின் வண்மை யுதவிய மலரை மன்னிரு வொளிவுடையோர்க்குக், கண்மையிற் கண்மை யுதவிய மதுவைக் கலிவளை புவனதந்தையருக், கண்மையினண்மை யுதவிய கமழ் வை அகுமதை யென்று காண்குவனே. (82)

பூவினிற் சிறந்த மக்கமா புரத்திற் புகழொடு பிறந்த நாயக ரைக், காவினிற் சிறந்த பதிமதினாவிற் கதியரசியற்றிய வேந்தை, பாவினிற் சிறந்த பாவகம்புனைந்த பையலுக்கருடருமுகிலை, நாவி னிற் சிறந்த நபிமுகம்மதுவை நலனுற வென்று காண்குவனே. (83)

கெடுவழி தன்னிலுழன்று கொண்டிருந்த கேடனை நேர்வழி யதனிற், படுவழியாக்கும் பாதபங்கயரைப் பற்றறுக் கொடுங் கொலைப் பவங்கள், நெடுவழிவேடனொடு கடமானுக்கிரங்கி ரட் சித்த நிர்மலரை, நடுவழியுடைய முகம்மது நபியை நயமுற வென்று காண்குவனே. (84)

காதகக்கொடியராகிய எகுதிக் கணத்தினுக் கிறையவ னுறைகொண், டேதரும்வாய்மைக் கினமுடனெழுந்தவெழிலி செய் கவிகையின் வேந்தைப், பாதகமெனும் வாரிதியினினீந்தும் பையலுக்கருங்கலசரணம், மேதகத்தரு மெய் முகம்மது நபியை வியந்திட வென்று காண்குவனே. (85)

ஞானவாரிதியை நபிகளுக்கரசை நானில மேற் சுவடுறுத, வானமாமணியை யிருநிதித்தருவை மரபுகட்கொருதனிச்சுடரை, மோனமா தவர்க டொழுநவமணியை மூவுல கனைத்துமோருல கிற், கோனியல்புரிய வரு முகம்மதுவைக் குணமுடனென்று காண்குவனே. (86)

ஆரணமுழுது நேர்வழி முழுது மருளிய வினோதயப்பொ ருளைக், காரணமுழுதும் காரிய முழுதும் கதிபெறநடத்துமென் கோவை, வாரணமஞ்சிலேறியே சுவனமுலாவரு மனோலயக்குரு வைப், பூரணவதன முகம்மது நபியைப் பொலிவுற வென்று காண்குவனே. (87)

நானிலவாழ்வை நான்மறைவாழ்வை நபிகளின்வாழ்வை யென்னிதயந், தானிலவாழ்வைத் தபோதனர் வாழ்வைச் சான்ற வர் வாழ்வை மேலோகப், பானிலவாழ்வைப் பாவகவாழ்வைப் பதிமதினு நகர் வாழ்வைக், கானிலவாழ்வை முகம்மது நபியைக் கண்களாலென்று காண்குவனே. (88)

புலவர் நாயகமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய வரையும் முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

இஃது

# ஈமான்மாலையும், பஞ்சநிவிர்த்தி

# முனாஜாத்தும்

இஃது

பேட்டை, கனம் உ. சி.

பக்கீர்முகியித்தீன் இராவுத்தரவர்கள் சீடர்

புலவர் ஆ. நா.

காஜா முகியித்தீன் இராவுத்தர்

அவர்களால் இயற்றப்பெற்றது.

ஷை புலவர் அவர்கள் குமாரர்

ஆ. நா. கா.

காஜா நாகூர்மீரா முஹியித்தீன் இர்ராவுத்தரால்

திருநெல்வேலி

ஹிலால் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

திருத்தமான இரண்டாம் பதிப்பு.

1935 ஜூன்மீ

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவருளொருவரான
தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் மகாமதி சதாவதானி
கோட்டாறு

## கா. ப. செய்குதம்பிப் பாவலரவர்கள் இயற்றிய

## நிலமண்டில வாசிரியப்பா:

உலகமுழுமையு மொரு பெருமானை யிலகப்
புரந்தவற் றெய்திய மெய்தாக், காரணவடிவாய்க் கணிப்
பரும் பொருளா, யாரண நிலையா யடி முடி யிலதாய்ச்,
செய்மையாயண்மையாய்ச் செப்பிடற் கியலாவாய்மையாயெங்க
ணும் வளம்பெறநின்ற, வொருமையை யுள்ளத்து வகையினிருத்
தி, யிருமையுங்காக்கு நம்பிறகுனபினர் திருப்பதஞ் சிரமேற்றிக
முறு மணியா, யொருப்படத்தாங்கி யோங்குறு மறிவால் வஞ்
சமி லீமான்மாலையோடரிய, பஞ்ச நிவிர்த்திப் பனுவலென் றிரு
நூன், மன்னவனைந்து மகிதலத் தளித்தா, னன்னவன்யாவ
னறைகுவல் கேட்டி, நீர் நிலை யுடை இய பார்மக டனக்குப், பேர்த
ருமுகனுச் சீர்பெறத்துலங்கித், தோற்றும் பாண்டித்தொன்னகர
தனுக், கேற்ற நற்றிலக மென வெழில்சிறந்து, பல்வகைவள னும்
பலிப்புற வயங்கிச், சொல்வகைக் கமையாத் தூய்மையி னுயர்
ந்த, பேட்டையென்னும் பெருநகர் புரியும், வாட்டமி றவமே வந்
தொருவடிவா, யுதித்த தென்ன வுற்ற நல்லுரவோன், கதித்த
சுசீல கண்ணிய கெம்பீர, னிலக்கணவிலக்கிய விருங்கடன் மடுத்
து, மலக்கணறக்கவி மாரிபொழிகிற்போ, னென்பானேசத் தெழி
னிலைநாடு, மன்பான் முதிர்ந்த வமைவினி லொருத்த, னறிவினி
லொருத்த னருளினி லொருத்தன், செறிவுறு வாய்மைச் சீர்மை
யிலொருத்தன், பொறிபுல னடக்கிப் போதமார் பொருளைச்,
செறிவுற வேண்டுந் திவ்விய சித்த, ஞசாபாச வலைகடன் மூழ்
காக், காஜா முகியித்தீனெனுங் கலைவலோனே.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# ஈமான்மாலை.

## காப்பு.

தனக்கிணையிலாதா யெங்குந்தானென விளங்கிநின்றே, யனைத்துலகாளும் வல்லவாண்டகையுனைத்துதித்தே, மனக்கனி வுடனெந்நாளும் வாழ்த்தியிப்ப னுவல்சொல்ல, எனக்கருள் புரிந்துகாக்குமேகனே காப்பு நீயே.

## நூல்.

பகரரும்பொருளே யெங்கும் பரந்துநின்றோர்கோலோச்சு, நிகரருமொருவனே நன்னீதிசேர் மறைவல்லோனே, யிகபர மிரண்டினுள்ளுமெளியனைக் காத்தென்னீமான், றகுதிசேர் நிலை மையாகத் தண்ணருள்புரிகுவாயே. (1)

பேதமையகற்றி யென்றும் பேருலகிடத்திலென்றன், றீதறக் காவல் செய்துன் றிருவருள் புரிந்தெந்நாளும், ஓதுமென் குடும்ப மெல்லாமுயர்வுசெய் தடியேனீமான், மேதைசேர் நிலைமை யாக மேன்மைதந்தருளுவாயே. (2)

மதிகதிரவனிகாய மற்றுளவுயிர்களெல்லாம், அதிவிதத்து டனமைத்தேயதற்குணவளித்துக் காக்கும், துதியினுக்குரியகோ வே துய்யனேயடியேனீமான், கதிபெறுநிலைமையாகக் காத் தருள் புரிகுவாயே. (3)

கருணைமாமுகிலேயார்க்குங் கணிக்கருங்கருத்தனை, ஒரு வனே யீறிலானேயுண்மையாம் பொருளேயுன்றன், திருநபிபொ ருட்டால் யான்செய்தீவினை நீக்கியீமான், ஒருமையினிலைமை யாக வுதவிசெய்தருளுவாயே. (4)

## வேறு.

கருப்பைக்குண்முட்டை கல்லினுட்டேரை கருதுமிவ்வு யிர்க்கு நல்லுணவு, விருப்புடனளிக்கு மெய்மை வதூதேமேல வா கருணைவாரிதியே, நெருப்புகுத்தொழுகுநரகுறுமமளி நினைந் தென்றும் வருந்துமென்னுள்ளம், வெருக்கொளாதெனக் கீமா னிலைதருவாய் வேதனே யாதிநாயகனே. (5)

மனமொடுவாக்குக் காயமொன்ருகி மருடருமும்மலங்கட ந்து, கனதிகொடவத் தினின்றமேலோருங் காணருஞ் சோதிமா முதலே, எனதுளம் விரும்பு மனேவிநன்மக்க ளின்புறக்காத் தெனதீமான், றனேயுநன்னிலேமையுறவருள் புரிந்தே தயவுசெய் ஆதிநாயகனே. (6)

உலகமும்வானு முயிர்களும் படைத்தே யுவந்துநற்கருணே செய்தருளு, நலமறைப்பொருளே யெங்கணன்னயினுர் நற்சபா அத்ததின்பொருட்டா, னிலமிசையடியே னுன்றனே வணங்கா நெறிதவர் பிழைபொறுத்தீமான், பலனுறு நிலேமை பெற்றுறச் செய்தேபாதுகாத் தருளென்னுயகனே. (7)

பிரபஞ்சமாயைப் பேய்பிடித்தலேந்தே பேதுறுங்கயவர்தம் முறவுங், கரவுறுங்கொடியபாதகர் கேண்மைக் கயமையுமுற்று மூலாது, தருமநல்லறிவுவணக்கநல் லொழுக்கத் தரமுமுற்றிட வெனக்கருளி, வரமுறுமீமானிலேமையுந் தருவாய் வகுக்கருஞ் சோதி நாயகனே. (8)

பழுதறு மொருவனெனவுளந் தெளிந்து பற்பல்காலுனேத் துதித்தேத்தி, வழிபடுதீனின் முஸ்லிமானவர்கள் வண்மை நற் கணத்தெளியேனுந், தழுவிநின்றிடு நல்லமலுடன் பொறுமைத் தன்மையுந்தமியனுக்கருளிக், கெழுமியவீமான் நிலேமைதந்தரு ளிக் கிருபைசெய் ஆதிநாயகனே. (9)

வானுறுமமரர் புவியுறுநரருமற்றுமெவ்வுயிர்களும் போற் றுந்,தானவனுன தனிமுதற்பொருளே தற்பரானந்தமாமணியே, மானிலமீதென்னிடமிபுலீசின் மருட்டுதலுற்றிடாதெனக்கீ, மா னிலே தந்திவ்வடியனேக் காப்பாய் வல்லமைக்குரியநாயகனே. (10)

சதுமறைப்பொருளே சகலபல்லுயிர்க்கும்தயாபரனுமுதல் வேந்தே, துதியுறுமுனது நாமமேதுதிசெய்தொண்டனென்ரு டர் பவநீக்கி, மதியொடுபகர்ந்த முகம்மதுநயினர் மாண்புறு கொடி நிழலதனிற், பதிவுபெற்றிடவுமென்றனக்கீமான் பலனரு ளாதி நாயகனே. (11)

இன்பொடுதுன்பமிணேயொடுதுணேயு மிலாதெங்கும் யேக மாய் நிறைந்த, அன்பினர்ஹமுர்ராகிமீ னேயுன்னருள் வளர் நபிகளின் பொருட்டாற், புன்மையேனியற்றும் பாவவினேயாவும் பொறுத்துநற்கருணேசெய்தென்றும், துன்புறுதீமானிலேமை தந் தருள்வாய் சோதியே ஆதிநாயகனே. (12)

மாதவர் துதிக்கு முகம்மதுநயினர் மகிமைசேர் நற்பொரு ட்டாலும், போதமார்ந்தொளிரும் ஹசனுசன்யார்கள் பொற்

புயர்நற் பொருட்டாலும், பேதையேன்பவங்கடொடர்பிணிபல தும்பெயர்ந்திட நீக்கிமானிலத்திற், கோதிலா தெனக்கீமானிலை தந்தேகுணமருளாதி நாயகனே. (13)

கலஞ்செய்யிபுலீசவன் செயுமாயங்கண்டறிந்தகல்வது மரிதே, புலகுறுமூன்று மாய்கையை நீக்கியுளந்தெளிந்துய்வது மரிது, சொலுமிவையான துன்புறுதெளியேன் சொற்றிடும்பனு வலுக் கிரங்கிப், பலனுறுமீமானிலைமைதந் தருள்வாய் பரமனே ஆதிநாயகனே. (14)

தொடுகடலுடுத்தபுவியினிலெளியேன் றொழின்முறை வர்த்தகவிருத்தி, வடுவிலாநிதியுமனைவிநன் மக்கள் வளமுறுசம்பத்தும் பெருகிக், கடியிருட்சைத்தான் றீங்கறக்கடிந்தே கவினுன தருளொளிவிளங்க, அடிமையென் னுளத்தீமானிலை கொளவும் ஆண்டருளாதி நாயகனே. (15)

நவமுறுங்கருணையாரஹுமானே நவிலுமிந்நானில மீதிற், பவவினையுழைத்த பாவியான் சிறியேன் பன்னுமிப்பனுவலுக் கிரங்கித், தவந்திகழ் மறையினுவிமாமவர்கள் தகுதிசேர் நற்பொருட்டாலே, அவமுறுதடியேன் றனக்கு நல்லீமானிலையருளாதி நாயகனே. (16)

பலகலையறிவும் பகர்தருபுறுக்கான் பண்மறை முகம்மது நயினர், இலகுநற்றீனுமிளைப்புறுங் காலமினிதுறத்தழீஇ யங்க தனை, நிலைபெற நிறுத்துங்குத்புலக்தாபா நீதர்முகியிதீன் பொருட்டாற், றலமதிலடியேன் றனக்கு நல்லீமான்றந்தருளாதி நாயகனே. (17)

பிணக்கறும் லாஇலாஹ இல்லல்லாஹுவெனப்பெட் புடனுரைத்துந், தணப்பறுமுகம்மதர் ரசூலுல்லாகியெனச்சாற்றுநற் கலிமா, இணக்கமுற்றடியேனுவி லெந்நாளுமிசைத்திடு முதவி செய்தீமான், மணக்கு நன்னிலைமைத் தெளிவெனக்கருள்வாய் மதிக்கருஞ்சோதி நாயகனே. (81)

வணக்கத்துக் குரியோனொருவன் அல்லாஹு நீயலான் மற்றிலை யெனவும், கணிக்கருங்கருணை முகம்மதுநயினர் கவினுமுன்றிருத்தூ துவரென், றிணக்கறப் பொருளார்ந்துறுங்கலிமாவை யெப்பொழுதினுமிசைத் தீமான், றணப்பிலா நிலைமையுறவருள் புரிவாய் சாற்றருஞ்சோதி மாமுதலே. (19)

பணக்கடு பாந்தள் வைப்பினிலேழு வகைப்படுதோற்றமாம் படைப்புந், தணப்பறப்படைத்துக் காத்தளிக்கின்றசத்துவகுணத்தின் பேரறிவே, நிணத்தசையுருக்குங்கனல் பொழிகியாமத்த மளிகணோர்ந்திடாதீமான், பிணக்கிலாநிலைமையுறவெனக்கருள் வாய்பேதியாச்சோதி நாயகனே. (20)

எனக்குனக்கெனவே யீட்டுபற்பொருளினின்புறு மாசையே கொண்டு, தனக்குடற்பிறப்பாந் தமரினங்களையுந்தள்ளி வஞ்சித்து வாழ்கின்ற, மனக்குரக்கனையார் சிந்தைபுறாது மன மெகிழ்வுறுந்தெளிவருளி, வனப்புறு மீமானிலைமையுந்தருவாய் வளமுயராதி நாயகனே. (21)

வரிசையும் பேறும் வண்மையுநிறைந்த வள்ளல் சுல்தானுல்லாரிபீன், கருணையின் பொருட்டென்றந்தைதாய் குருவுங்க வலுமென் குடும்பத்தினோர்கள், சிரமங்களூறு மெப்பிழைகளும் பொறுத்துன்றிருவருள் புரிந்தெந்த நாளும், வரம்பெறவெளியேன்றனக்கு நல்லீமான் வளமருளாதி நாயகனே. (22)

நாட்டமென்னுளுமுன்றிருத்துதியென் னுவிலுமுளத்திலுமுறவே, தேட்டங்கொண்டுறுமென் றீவினைமுதலாஞ்செய்பிழை யாவையுஞ் சிதைத்து, வாட்டங்கொண்டுழலுந் துன்பிகபரமும் வந்தடுத் தெனையணுகாமற், றூட்டிகமுறஈமானிலையருள்வாய் தனியனே ஆதிநாயகனே. (23)

உலகமீரேழும் அல்லாஹு வென்றேத்துமொருவனேரெபூபுர்ரகீமே, தலமதிலடியேன் பிழையெலாம் பொறுத்தே தமியனென்மனத்தெளிவுறவே, நலமுறுமுனது மறைநெறியொழுகிநாடுமென்றனக்கு நல்லீமான், நிலைபெறத்தந்துன்னருள் புரிந்தாள்வாய்நீதியே யாதிநாயகனே. (24)

அற்புதானந்தப் பேரின்பவாழ்வே யடியனைக்காக்குந்தாயகமே, வற்புறுகபுரினதாபுடன் கேள்விவருத்தங்களுடனுமா கிரத்தில், வெப்புறு பாலங்கடத்திலைப் பதிலும் வேதனைத்துன்பங்கணீக்கிப், பொற்புறு மீமானிலையருள் புரிவாய் பொருவருமாதி நாயகனே. (25)

நாடுமிவ்வடியேனுட்டங்களெல்லா நவிலுமுன்னருளன்றி வேறு, தேடுவதிலை யென்னுளத்தின் ஹாசத்தைத்தெளிவுறவுனதுதீதாறும், ஏடலர் கௌதுல் கௌதர் நீரருந்தியெழிலுறு சுவன வீடுறவுஞ், சேடுயரீமானிலைமை தந்துதவிசெய்தருளாதி நாயகனே. (26)

இறைவனே யென்றுமீறிலாப்பொருளே யேகனே கருணைவாரிதியே, மறைபுகழுனது கபீபிறசூல்தம் மலரடிக்கடியனென்றனக்கு, அறம்பொருளின்பம் வீடெனு நான்குமருளுந்தண்ணளி புரிந்தீமான், நிறைவுறு நிலைமை தந்தெனையாள்வாய் நித்தனே ஆதிநாயகனே, (27)

மன்னு மிவ்வுலகில் வாழுமிவ்வடியேன் வாக்கொடுமனமு மொன்றாகத், துன்னுபாதகத்தின்றொடர் தருமிச்சை தோன்றிடாதுறுதி நன்னிலைகொண், டுன்னையான்றுதித்துன் றனையு மென்றனையு முணர்ந்தறிந்திடு வரமருளிப், பின்னமற்றிடு மீமானிலை தருவாய் பெருமை சேராதி நாயகனே. (28)

## வேறு.

அருளே அல்ஹம்தானவனே யறிதற்கரியபேரொளியே, தெருளுமேலோரறிவினுக்குந்தெரியக் கூடாப்பரம்பொருளே, கருணாநிதியே கற்பகமேஹக்கே கருதற்கரும் வாழ்வே, மருளும் புன்மை நீத்தீமானிலைமையருளென்னாயகனே. (29)

புலன் செல்வழியே மனஞ்செல்லாப் பொற்பார்தவத்தோரனுதினமும், நலங்கொண்டுறவே துதித்தேத்துநாதாநவிலுமுனதடியேன், கலங்குமுள்ளத்துறுங் கவலைகாணாதகற்றிக்கதி சேர்க்கும், வலன் கொளீமானிலையருள்வாய் வளஞ்சேராதிநாயகனே. (30)

சொல்லுஞ்செயலு மொன்றாகத்துன்பமின்ப மொன்றாக, அல்லும் பகலுமுனைத்துதிக்கு மாசையுளத்திலுற்றடியேன், நல்லோர்புகழு நபிபொருட்டானலஞ்சேர் மூமின்கணத்துறவும், புல்லனெனக்கீமானிலைமைப் புனிதமருளென்னாயகனே. (31)

## வேறு.

ஒப்புயர் வெவையுமுரைப்பதற்கரிய வொருவனே யுலக மீரேழு, மெய்ப்புறப்படைத்தே முத்தொழில் புரியுமெய்ம்மையா மலிக்குல் குத்தூசே, செப்புமுனபயமபயமென்றேத்துஞ் சிறியனுன்னடிமையைக் காத்துத், தப்புறாதீமானிலைமை தந்தருள்வாய் தயாநிதி ஆதிநாயகனே. (32)

மணமுறுமினிய மலரினன் மணமே மருவிய தன்மைபோன் றறிஞர், அணிதருமிதயத்துறைந்த பேரொளியே யடியர்களுன திடத்தினிலே, பணிவொடுகேட்குந்துஆக் கபூல்செய்தே பகரிம்மை மறுமைக்காதரவாய்த், தணிவுறாதீமானிலைமை தந்தருள்வாய் தனியனே ஆதிநாயகனே. (33)

## வேறு.

ஆக்கமுற்றிட வாண்டருள் செய்தடியனையுங், காக்கு வல்ல வனீயன்றியொன்றையுங்காணேன், தேக்குமெய்மறைமுகம்மதர் திருவடிக்காளாய், ஆக்கியே பலன்றந்தருளாதி நாயகனே. (34)

காப்பு விருத்தம்—1
ஆகக்கூடிய விருத்தம்—35

ஈமான்மாலை முற்றுப்பெற்றது.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்

பஞ்ச நிவிர்த்திக்காக

## அல்லாகுத்தஆலா பேரிற் பாடிய

# முனாஜாத்து.

காப்பு

சாக்கரஞ் சுழுத்தி சொப்பனமென்னச் சாற்றிய முப்பொ
ழுதினுமே, நீக்கருநிமலனேயுனைப் பணிந்தே நிகழ்த்துயிரின
மெலாந்தழைக்கத், தேக்குசூன் முதிர்ந்தித் தேயங்கடோறுஞ்
செழுமுகிலினமழைபொழியப், பாக்கியம்பெருகஅடியனுன்மீது
பகரும்பாவினுக்கருள்வாயே. (1)

நூல்

இருநிலமாக்கள் பறவையூர்வனங்களியல்புறுஞ்ஜின் விலங்
கினமும், பெருமைசேர்நீரிலுறைந்துவாழ் ஜெந்தும்பெட்புறு
தாவரமனைத்தும், அருமையினமைத்தவ்வெழுவகைகளுக்குமம்
புவியிடத்தமுதாகும், ஒருதிருறகுமத்தாமழை யதனையுலகினில்
வழங்கு நாயகனே. (1)

மண்ணினிலிட்ட பயிரினங்களுக்குவான்மழை பொழிந்தி
டாதாலே, கண்ணினுலவைகட்குறுதுயர்காண்கக் கருத்தழிந்து
னதருளுடி, விண்ணினை நோக்கி நோக்கியே யிரந்துவேண்டுநின்
னடியவர்க்கிரங்கித், தண்ணளியுனது றகுமத்தாமழையைத்
தரையினில் வழங்கு நாயகனே. (2)

புண்ணியப்பொருளா மெங்கணன்னயினுர் முகம்மதுநபி
பொருட்டாலே, எண்ணருமிசுலாநெறிமுறையவர்க் கெங்நாளி
னுமிகபரத்தினுமே, நண்ணுமெப்பொருள்களு மருள் புரியுநா
தனே யாறஹ்றுமானே, வண்ணமே சிறந்தகருணை செய்துலகில்
வான்மழை வழங்கு நாயகனே. (3)

பூரணக்கிருபை புரிபவனொருவனீயலாற் புவியுமம்பரத்தும்
ஏரணித்துறுவோ னெவனுளனேக நாயக ஏழைகட்கிரங்கிப்,
பேரணித்துறு மித்தரையினிற்பைங் கூழ்தழைத்திடப் பெரு
நலஞ்சிறக்கக், காரணத்திறசூல் பொருட்டினித்தருணம் கவின்
மழைவழங்கு நாயகனே. (4)

தாய்முகங்காணுச்சேயென வாடுந்தகைமையென்றுரைப்பர்தாயினுமே, மாயிரும்புவியி லுவமையிலடங்கா வல்லவ நின்னருளிலேயேல், தாயொடுதந்தை தமரினங்களினூற்றர முறச்செயும் வகையெதுவாம், ஞாயிறை மதியையமைத்தவவுலகினன் மழைவழங்கு நாயகனே. (5)

தானமுந்தவமுங்கிளைஞ ராதரவுந்தங்குமோதரணிமீதென்றும், வானமே வழங்காவிடிலெனு முரையான் மற்றவையுய்வது மஃதே, நானமே கமழுநபிபறக்கத்தினு னிலத்திடு பயிர்செழிக்க, ஈனமற்றிட வித்தருணத்திலினிய மழையினை வழங்கு நாயகனே. (6)

இன்மையினுண்மை காட்டி யெங்கணுமே யினிதுற நிறைந்தருளிறைவ, பன்மையிற்சிறந்த புகழினுக் கடங்காப்பரமனே யுற்பவிபவத்தின், றின்மைகளணுகா தடியவர்க் கிரங்கித்திகழ்திக பரத்தினு மருள்செய், நன்மறைப்பொருளே நானிலந்தழைக்க நனிமழை வழங்கு நாயகனே. (7)

இருமையும் பயக்குமியன் மறைநெறி தந்தெழி லுறுநபிமுகம்மதரை, அருமைசேருலகினுனதடி யவர்கட்கருள் செயுங்குருவெனவமைத்தே, திருவருள் புரியுங் கருணையங்கடலே செப்புமித்தருணத்திலினிய, கருமுகிலினங்களாற் சொரிதர நற்கவின் மழைவழங்கு நாயகனே. (8)

பசியுறுமிடியோர் வாட்டங்கண்டுதவு பன்னருநெறிமுறையோர்க்குங், கசிவுறுமிரக்கமெள்ளளவில்லாக்கன்மிக டமக்குமிவ்வுலகிற், புசிதலுக்குரிய விரணங்கள் பொதுவாய்ப் பொற்புறவருளுமெந்தா, நசிதலுற்றுணங்கு பயிரினந்தழைக்க நன்மழைவழங்கு நாயகனே. (9)

நாடு நல்லடியாரிதையமீதொளிரு நவிலருஞ் ஜீவரத்தினமே, பாடுநல்லறிவோர் பாப்புனைந்துன் மேற்பகரு நற்பாகினுக்கிணையாய்ப், போடுமுப்பில்லாக் கூழெனப்புகலும் புன்மையேன்பனுவலுக்கிரங்கி, வாடுநற்பசிய பயிரினஞ்செழிக்கவான் மழைவழங்கு நாயகனே. (10)

ஆதமேமுதலாமன்பியாவானோரனை வர்க்குமரசென வகுத்து, வாதமிட்டிணை வைத்துறுங்குபிரோர்கள் வன்மனக்கசடறுத்துலகி, னீதமேபெருகநன்மறைநெறியே நிகழ்த்துநந்நபிபொருட்டாலே, போதமே பெருகப்பயிரினந்தழைக்கப் பொன்மழை வழங்கு நாயகனே. (11)

## வேறு.

படியரிசிரண்டினோடு பகருமீரரைக்காலென்ன, அடவுரு திந்தவூரிலகவிலைத்தாழ்வாய் விற்குங், கொடுமையா லெளியோ ரெல்லாங்குலை குலைந்துயிர் பதைக்க, மிடியறிந்திரங்காவுத்தர் வீண்களிப்புறுகின்றாரால். (12)

இக்கொடும் பஞ்சந்தன்னை யிறையவனே நீக்கியெங்கள், பக்கநின்கருணைசெய்திப் பாரினிற்பைங்கூழெல்லா, மிக்கவே செழிப்புற்றோங்கி மிகுவிளைவுகளுண்டாகத், தக்கநற்கருணை செய்வாய் தனிமுதற்பொருளானோனே. (13)

## வேறு.

## வாழ்த்துக் கவிதை.

இலங்குநல்லீமான் மாலையினோடு மின்னலுற்றிடு பஞ்ச நிவிர்த்தி, நலங்கொளும் பாக்களென்னு நூலினையு நவின்றதையச் சியற்றிடவே. புலன்கெழுமகிழ்வினொடும் பொருளுதவி புரிந்த நற்புண்யராந்தீனின், பலன்கொளு முஸ்லிமானவர்க்கெல்லாம் பவம் பொறுத்தருள்செய் நாயகனே. (14)

காப்பு விருத்தக் கவி—1

ஆகவிருத்தம்—15

பஞ்ச நிவிர்த்திக்காக அல்லாகுத்தஆலா பேரிற்பாடிய

## முனாஜாத்து முற்றுப்பெற்றது.

இம்முனாஜாத்துகளைத் தொழுது முடிந்தபின் ஒலுவுடன் திரிகரணசுத்தியாயிருந்து படித்து முடிவில் நாடிய கருமங்களை அல்லாகுசுபுஹானகுவதஆலா இடத்தில் துஆயிரந்து கேட்கில், அந்த ஹாஜத்துக்களை நபிநாயகம் அவர்கள் பொருட்டினால் நிறைவேற்றித்தருவானாகவும், ஆமீன்! ஆமீன்! யாரப்பிலாலமீன்.

இங்ஙனம்.

ஆ. நா. காஜாமுகையிதீன் ராவுத்தர்,

ரகுமான் பேட்டை.

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி டவுண்—6—'35.

# அறிவிப்பு.

அல்லாறசூலுக்கு ஈமான்கொண்டு இஸ்லாமாகிய முஸ்லிமானவர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில், இதிலடங்கிய முதுமொழிமாலை முதலிய முனாஜாத்துக்களை இரவிலும் பகலிலும் நாள் ஒன்றிற்கு ஐந்து நேரம் தொழுது முகிந்த பின்னர் திரிகரணசுத்தியுடனிருந்து படித்து முடிவில் அல்லாகுத்தஆலாவிடத்திற் றுஆவிரந்து தங்கள் கருத்திற் கிசைந்த தீனிலாகுமான கருமங்களைக் கேட்கில், அவ்வடியார்களினுட்டத்தை நமது நாயகம் முகம்மது முஸ்தபாறசூல் சல்லல்லாகு அலைஹி வசல்லம் அவர்களின் பொருட்டைக்கொண்டு நிறைவேற்றித் தருவானுசவும். ஆமீன்! ஆமீன்!! யாறப்பிலாலமீன்.

# விளம்பரம்.

இப் புத்தகம் வேண்டியவர்கள் பேட்டையைச் சேர்ந்த றஹ்மான் பேட்டையில் வசிக்கும் ☞ புலவர் ஆ. நா. காஜா முகியிதீன் இராவுத்தர் அவர்கள் குமாரர் ஆ. நா. கா. காஜா நாகூர்மீரா முஹியித்தீன் இராவுத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு விலை அணா 6.

ஒரே தடவையில் 10 புஸ்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகமும், 100 புத்தகம் ஒரே தடவையில் வாங்குவோர்களுக்கு 12 புத்தகமும் கமிஷன் கொடுக்கப்படும்.

இப்படிக்கு,

ஆ. நா. கா. காஜா நாகூர்மீரா முகியித்தீன் இராவுத்தர்,

றஹ்மான் பேட்டை, பேட்டை.